பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' – A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: ஆடி 11 (26—7—72) புதன் வெளியூர்: ஆடி 12 (27—7—72) வியாழன் [இதழ்: 36

விவசாயிகட்குப் பாஸ் புத்தகம்!

திருச்சி, ஜூலை 26—

தமிழ்நாட்டிலுள்ள விவசாயிகளுக்குப் 'பாஸ்' புத்தகங்கள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. . .

கடன் வசதிகள் போன்ற பல வேறுவிதமான உதவிகளை விவசாயிகள் இப்போது அரசிடமிருந்து பெற்றுவருகிறார்கள்; ஆனால், 'எவ்வளவு கடன் பெற்றிருக்கிறார்கள்' என்பதைக்

(4-ம் பக்கம் பார்க்க)

அநீதி -- அக்கிரமம் -- கொடுமை

இந்திரா கட்சி முதலமைச்சரின் இரத்தவெறியாட்டம்

★

குண்டர்களைத் தூண்டிவிட்டுப் போலீசாரே நடத்திய திருவிளையாடல்

எழுபதுக்கு மேற்பட்டோர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலி-

நாய்களைப்போல் வீதிகளில் சுட்டு வீழ்த்தப்பட்டனர்

உ. பி. மாநிலத்தில் நடந்த துப்பாக்கித் தர்பார்-- ஆய்வுக் குழுவினர் கண்டறிந்த உண்மை

களை முஸ்லிம் சமுதாயத்தினர் இருந்திருக்கின்றனர்.

இந்தக் கலவரத்தை ஜன சங்கத்தினர் தூண்டிவிட்டதாகக் கூறப்படுவது உண்மையல்ல.

கொள்ளை -- கொலை -- கற்பழித்தல் போன்ற செயல்களில் ஈடுபடும் குண்டர்களுடன் சேர்ந்து போலீசாரால் துவக்கப்பட்டதே இந்தக் கலவரமாகும்."

ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரே வெளியிட்ட உண்மை

புதுடில்லி, ஜூலை 26—

"உ.பி. மாநிலத்தின் பெரோசாபாத் -- வாரணாசி -- அலிகார் பகுதிகளில் சுமார் 70 க்கு மேற்பட்ட மக்கள் நாய்களைப்போல் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர்; ஆளும் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரான திருமதி சுபத்ரா ஜோஷி என்பவரே இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

"மாநில ஆயுதப் படையினரும் -- போலீசாருமே இந்தக் கோர நிகழ்ச்சிக்குக் காரணமானவர்களாவர்"

என்று, உத்தரப் பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்ற கலவரம் -- துப்பாக்கிச்சூடு பற்றி ஆராயச் சென்ற தி.மு.க. -- முஸ்லிம் லீக் -- பாரதீய கிராந்தி தளக் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் தூதுக் குழு விடுத்த அறிக்கை ஒன்றில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

இந்தத் தூதுக் குழுவில் கழக உறுப்பினர்கள் நாஞ்சில் கி. மனோகரன், தில்லை வில்லாளன், மற்றும் ஏ. கே. ஏ. அப்துஸ் சமது, காஜா மொகிதீன், சியாம் லால் யாதவ், டாக்டர் ஷமிம் அகமது (உ.பி. முஸ்லிம் லீக் தலைவர்) ஜஹீர் அகமது கான் (உ.பி. முஸ்லிம் லீக் செயலாளர்) ஆகியோர் உள்ளனர்.

குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:—

"நடைபெற்ற இனக் கலவரத்துக்கு, முதலமைச்சரின் பாசிச மனப்பான்மையும் -- போலீசாரின் அத்துமீறல் நடவடிக்கைகளுமே காரணமாகும்.

உண்மையில் இந்தத் தகராறு முஸ்லிம் சிறுபான்மையினருக்கும் -- போலீசாருக்குமிடையே நடைபெற்றதாகும்.

இந்தக் கலவரம் காரணமாக 70-க்கு மேற்பட்டவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர்; சுமார் ரூ. 3 கோடி மதிப்புக்கு மேலான சொத்துக்

பொருளாதாரத் துறை அமைச்சர்கள்

ஒருங்கிணைந்து செயல்பட ஏற்பாடு

புதுடில்லி, ஜூலை 26—

மத்திய அமைச்சரவையைச் சேர்ந்த பொருளாதாரத் துறை அமைச்சர்கள் அனைவருமே இனிமேல், ஒரே குழுவாக இருந்து செயல்படப்போகின்றனர்.

"அரசின் பொருளாதாரக் கொள்கைகளை வெற்றிகரமாக நிறைவேற்ற அமைச்சர்களிடை -- குறிப்பாகப் பொருளாதாரத் துறையைச் சேர்ந்த அமைச்சர்களிடை கூட்டாகச் செயல்படும் போக்கு இருக்க வேண்டும்" என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, மற்ற அமைச்சர்களிடம் எடுத்துக் கூறியிருந்தார்.

இது தொடர்பாக எப்படிச் செயல்படலாம் என்பதைப் பரிசீலிப்பதற்காக ஆலோசனைக் கூட்டம் ஒன்றைத் தொழில் வளர்ச்சித் துறை அமைச்சர் சி. சுப்பிரமணியம் கூட்டியிருக்கிறார்; இக் கூட்டத்திற்குத் தொழில் வளர்ச்சித் துறை அமைச்சர்கள், மற்றும் திட்டம் -- உருக்கு -- சுரங்கம் -- இரயில்வே -- வெளிநாட்டு வாணிபம் ஆகிய அமைச்சகத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

பெரிய கொள்கை வகுப்பு முடிவுகளைத் தொடர்ந்து, மத்திய அமைச்சரவையின் பொருளாதாரக் கொள்கைக் குழுவே தீர்மானிக்கும் என்றாலும், கொள்கை முடிவுகள் தேவையில்லாத திட்டங்களை விரைவுபடுத்திச் செயலாக்க இந்தப் புதிய குழு தீவிர நடவடிக்கை எடுக்கும் என்று நம்பப்படுகிறது.

ரூ. 4.63 இலட்சத்துக்கு வாங்கிய இயந்திரங்கள்

ஐந்தாண்டுக்காலமாகப் பயன்படாமல் இருக்கின்றன

பம்பாய், ஜூலை 26—

பம்பாயிலுள்ள அரசு அச்சகத்திலும் - பூனாவிலுள்ள நிழற்பட அச்சகத்திலும் ரூ. 4,63,000 மதிப்புள்ள அச்சு இயந்திரங்கள் வீணாகக் கிடக்கின்றன; 1967-ம் ஆண்டுமுதல் அவைகள் பயன்படுத்தப்படவில்லை!

மாராட்டிர சட்டமன்றத்தில் இத்தகவலை தொழில் அமைச்சர் என். எம். டிட்கே தெரிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"இங்கு அரசுப் பாடப் புத்தக நிறுவனம் 1967-ல் நிறுவப்பட்டது; அது முதல் பாடப் புத்தகங்கள் தனியார் அச்சகங்களிலேயே அச்சாகின்றன.

"அரசு அச்சகத் துறைக்கும்-- பொதுக் கார்ப்பரேஷனுக்கும் இடையே இணைந்த நடவடிக்கைகள் இல்லாத காரணத்தால் இதுபோன்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது; இவைகள் இணைந்து செயல்பட நடவடிக்கை எடுத்துவருகிறேன்."

பத்தாண்டுக்குப்பின் கூடிய

தென் மண்டலக் குழு

இந்திரா காந்தி தலைமையில் தென் மாநில முதலமைச்சர்கள் பங்கேற்பு

பொதுவான பிரச்சினைகள் குறித்துப் பரிசீலனை

ஐதராபாத், ஜூலை 26—

கடந்த பத்தாண்டுகளுக்குப் பிறகு முதல் தடவையாகத் தென் மண்டலக் குழுக் கூட்டம் இன்று இங்கு துவங்கியது; இதற்குமுன் இந்தக் குழுக் கூட்டம் 1962-ல் நடைபெற்றது.

இப்போது நடைபெறும் கூட்டம் முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலையில் நடைபெறுகிறது.

அப்போது மத்திய உள்துறை அமைச்சராக இருந்த லால் பகதூர் சாஸ்திரி இக்கூட்டத்துக்குத் தலைமைவகித்தார்; அந்தக் கூட்டத்திற்கு வருகை தந்திருந்த மூன்று மாநில முதலமைச்சர்களும் இப்போது பதவிப் பொறுப்பில் இல்லை; சஞ்சீவி ரெட்டி, நிஜலிங்கப்பா, காமராசர் ஆகியவர்களே அவர்கள்.

இப்போதைய கூட்டத்துக்கு, உள்துறை அமைச்சுப் பொறுப்பையும் கவனிக்கும் தலைமையமைச்சர் இந்திரா காந்தி தலைமை வகிக்கிறார்.

தமிழ்நாடு முதல்வர்

இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் பொருட்டுத் தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நேற்று காலை இங்கு வந்து சேர்ந்தார்.

அவர் நேற்று, கோல்கொண்டா கோட்டை மற்றும் சாலார்ஜங் கலைக்கூடம் போன்ற முக்கிய இடங்களைப் பார்வையிட்டார்.

இக்குழுக் கூட்டத்தில் பல முக்கியமான பிரச்சினைகளும் விவாதத்துக்கு வரும் என்று தெரியவருகிறது.

தென் மாநிலங்களுக்குப் பொதுவான ஒரு மின்சாரம் வழங்கும் திட்டத்தை ஏற்படுத்தலாம் என்று ஒரு திட்டம் பரிசீலனைக்கு வர இருக்கிறது; தமிழகம் கூறிய இந்த யோசனையை ஆந்திரமும் வரவேற்கிறது; ஆனால், மைசூர் இந்தத் திட்டத்தை எதிர்ப்பதாகத் தெரியவருகிறது.

அரிசிப் பிரச்சினை மற்றும் நிகழ்ச்சி நிரலை, விவாதத்தில் சேர்க்க வேண்டுமென்று கேரளம் விரும்புகிறது.

மற்றும் தென் மாநிலக் கல்வி நிலையங்களில் வேறு மாநில மாணவர்கள் சேர்ந்து படிப்பதற்கு இருக்கும் தடங்கலை நீக்க வேண்டுமென்ற குறிப்பை ஆந்திரம் ஆதரிப்பதாகத் தெரியவருகிறது.

இக்குறிப்பு, மத்திய கல்வி அமைச்சகத்தின் யோசனையால் இணைக்கப்பட்டிருக்கிறது.

மற்றும் பொதுவான சம்பளம் -- படி விகிதப் பிரச்சினைகள் குறித்தும், கூட்டத்தில் விவாதிக்கப்படும்.

தொழிலாளர் பணத்தை முடக்கும் முதலாளிகட்குச் சிறை

சட்டம் கொண்டுவர மத்திய அமைச்சரவை முடிவு

புதுடில்லி, ஜூலை 26—

தொழிலாளர் வைப்பு நிதிக்குச் சந்தா கட்டத் தவறும் தொழிலதிபர்களுக்கு ஒரு மாதக் கட்டாயச் சிறைத் தண்டனை அளிக்கும் வகையில் சட்டத்தைத் திருத்துவது என்று நேற்று கூடிய மத்திய அமைச்சரவை முடிவு செய்தது.

தொழில் நிறுவனங்கள் பெரும் அளவுக்குத் தொழிலாளர் வைப்பு நிதிச் சட்டத்தை மீறுவதைத் தடுக்கவே இம்முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இரண்டாவது தடவையும் இதே தவறைச் செய்பவர்களுக்கு மேலும் கடுமையான தண்டனை தர வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தின் அடுத்த கூட்டத் தொடரில் இது குறித்த திருத்தச் சட்டம் கொண்டுவரப்படலாம் என்று தெரியவருகிறது.

காந்தி-அண்ணா வழியில் எம்.ஜி.ஆர்.

மக்கள் உள்ளத்தில் நிலையான இடம் பெற்றவர்

மனிதப் பண்புகளை மதிக்கும் மாண்பே அவருடைய சிறப்புக்குக் காரணம்

பாராட்டுக் கூட்டத்தில் நாவலர் விளக்கம்

சென்னை, ஜூலை 26—

"மக்கள் இதயங்களில் எல்லோருமே இடம் பெறுவதில்லை! உலகத்தில் ஒரு சிலர்தான் அப்படி இடம்பெற முடிகிறது! வியத்தகு செயல்களைச் செய்தவர்களை மக்கள் பாராட்டுவார்கள் -- ஆனால், தங்கள் இதயத்தில் என்றென்றும் வைத்திருக்கமாட்டார்கள்! உலக வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் அந்த உண்மை நமக்குத் தெளிவாகும்.

"நெப்போலியன் -- அலெக்சாண்டர் -- ஐன்ஸ்டீன் போன்றவர்களை மக்கள் பாராட்டுகின்றார்களே தவிர, நெஞ்சில் வைத்திருக்கவில்லை; ஆனால், ஆபிரகாம் லிங்கனையும் -- உத்தமர் காந்தியடிகளையும -- புத்தனையும் -- இயேசுவை பேரறிஞர் அண்ணா அவர்களையும்தான் நாட்டு மக்கள் தங்கள் இதயங்களில் வைத்திருக்கின்றனர்.

"மனிதப் பண்புகளை மதிக்கின்றவர்களையே உலகம் எப்போதும் மறக்காமல் தன் உள்ளத்தில் வைத்துப் போற்றுகிறது; இந்த வரிசையிலே இணைகிறவர்தான் நமது கழகப் பொருளாளரான புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்கள்!

"அடிப்பாரும் இல்லை -- இடிப்பாரும் இல்லை; ஒப்பாரும் இல்லை -- மிக்காரும் இல்லை' என்கின்ற அளவுக்கு அவர் இருப்பதற்குக் காரணமே, 'மனிதப் பண்புகளை அவர் மதிக்கிறார்! கோடானுகோடி மக்களுக்கு நலம் சேர்க்கும் விதத்தில் அவர் பாடுபடுகிறார்' என்பதால்தான்"

என்று, கழகப் பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், பல்லாவரத்தில் நடந்த எம்.ஜி.ஆர். பாராட்டு விழாவில் பேசுகையில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்; நாவலர் மேலும் பேசியதாவது:—

"படை பெருத்ததால் பார் சிறுத்ததோ -- பார் சிறுத்ததால் படை பெருத்ததோ' என்றோர் புலவன் குறிப்பிட்டான்.

அதைப்போல், புரட்சி நடிகரைப் பாராட்டக் கூடியிருக்கும் இந்த மாபெரும் கூட்டத்தால், 'பல்லாவரம் சிறுத்ததோ -- எம்.ஜி.ஆர். படை பெருத்ததோ' என்கின்ற அளவில் இங்கே, வெள்ளம் போல் தமிழர் கூட்டம் -- வீரங்கொள் கூட்டம் திரண்டிருக்கிறது!

இந்தப் பாராட்டு விழா அவரை மகிழ்விப்பதற்காக அல்ல -- அவரைப் பாராட்டுவதன்மூலம் நாம் மகிழ்கிறோம்; அதற்காகவே இந்தப் பாராட்டு விழா நடத்தப்படுகிறது.

'எங்க வீட்டுப் பிள்ளை' என்று இந்த நாட்டு மக்களெல்லாம் போற்றுகின்ற அளவுக்குப் புரட்சி நடிகர் நம்முடைய கொள்கையாலும் -- கோட்பாட்டினாலும் உயர்ந்திருக்கிறார்; அதனால் தான் அவரை நாமும் மகிழ்ந்து பாராட்டுகிறோம்.

ஒருவரைப் பாராட்டுவது வேறு -- நெஞ்சில் வைத்துக் கொண்டாடுவது என்பது வேறு.

ஐயாயிரம் கோடி ரூபாயில் மத்திய அரசு திட்டம் தீட்டினாலும் -- நானூறு கோடி ரூபாய்ச் செலவில் மாநில அரசு திட்டம் தீட்டினாலும் மக்களை மகிழ்விக்க முடியாது; அவர்கள் நெஞ்சில் ஏதாவதொரு குறை இருக்கத்தான் செய்யும்.

குறைவற்ற மகிழ்வைத் தர கலை வல்லார்களால்தான் முடியும்; அப்படிப்பட்ட கலை வல்லுநர்களில் முதல் அணியில் நிற்கிறார் புரட்சி நடிகர்!

துக்கத்தையும் -- துயரத்தையும் -- தொல்லையும் தருபவர்கள் உலகில் நிறைய பேர் இருக்கிறார்கள்; ஏனென்றால், அது எளிது; மற்றவர்கட்கு மகிழ்ச்சியைத் தருவதுதான் கடினம்.

அப்படிக் 'கடினம்' என்கின்ற காரியத்தையும் எளிதாகச் செய்து எல்லோர் நெஞ்சிலும் இடம் பிடித்திருப்பவர் நமது எம்.ஜி.ஆர்.!

பேரறிஞர் அண்ணா அவர்கள் சுட்டு விரல் நீட்டிய திக்கில், அவர் கூறிய சமுதாய -- பொருளாதாரக் கொள்கைகளுக்குத் தன்னை ஒப்படைத்து நடைபோட்டுவருபவர் புரட்சி நடிகராவார்!

தம்முடைய இலட்சியத்தையும் -- கொள்கையையும் கலையின் மூலம் எடுத்துச்சொல்லி வருகிறார் அவர்; கலைஞர்களால்தான் இது முடியும்!

இன்றிருக்கின்ற, தமிழ்ச் சமுதாயத்தை நடத்திச்செல்லும் இடத்தில் இருப்பவரும் ஒரு கலைஞர்தான் என்பதை நாம் மறந்துவிடலாகாது.

எம்.ஜி.ஆர். அவர்கள் உயர்ந்தது -- என்னோடும் கலைஞரோடும் இணைந்து செயல்படுகிறார்.

அறிஞர் அண்ணா அவர்களாலேயே, 'புரட்சி நடிகர்' என்கிற பட்டம் தந்து பாராட்டப்பட்டவரான எம்.ஜி.ஆர். அவர்களை அழைத்துச் சிங்கப்பூர் அரசும் சிறப்புப்பட்டம் தந்து கௌரவித்திருக்கிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே புறநானூறு பாடியவர்கள், 'உண்டால அம்ம இவ்வுலகம்' என்கின்ற பாட்டில், 'தமக்கென முயலா நோன்றாள் பிறர்க்கென வாழும் தன்மையானே; என்று இந்த உலகம் வாழ்வதற்கான காரணத்தைக் கூறியிருக்கிறார்கள்:

'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையம்' என்பார்கள்.

'தாம் இன்புறுவது உலகின் புறக் கண்டு -- காமுறுவர் கற்றறிந்தார்' என்று குறளில் கூறப்பட்டுள்ளது.

இந்த வகையிலெல்லாம் தமது நடவடிக்கைகளை அமைத்துக் கொண்டு உயர்ந்து நிற்கிறார் புரட்சி நடிகர் அவர்கள்.

கலையைக் கலையாக மதிப்பவனைத்தான் கலை மதிக்கும்; கலையை மதிக்காதவனைக் கலையும் மதிப்பதில்லை; அப்படி மதிக்காதவர்களைக் கலையே தூக்கியெறிந்த வரலாறெல்லாம் நாம் கண்டிருக்கிறோம்!

புரட்சி நடிகர் கலையை மதிக்கிறார் -- புரட்சி நடிகரைக் கலை மதிக்கிறது!"

ஒலிபெருக்கி அனுமதிக் கட்டணம் ரத்து

திருச்சி, ஜூலை 24—

ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துவதற்காக நீதிமன்றக் கட்டணம் அல்லது லைசென்சுக் கட்டணம் விதிக்கத் தேவை இல்லை என்று தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துவதற்காக லைசென்சு வழங்கும் பொருட்டு நீதிமன்றக் கட்டணம் -- லைசென்சுக் கட்டணம் வசூலிக்கும் வழக்கத்தைக் கைவிடுவது பற்றி நீண்டகாலமாக அரசு பரிசீலித்து வந்தது; அதன் பின்னர் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

எனவே, ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்த லைசென்சு வழங்கும் பொருட்டுத் தாக்கல் செய்யும் விண்ணப்பத்தில் இனி நீதிமன்றக் கட்டண ஸ்டாம்பு ஒட்டத் தேவையில்லை; லைசென்சுக் கட்டணம் எதுவும் கட்டத்தேவையில்லை; சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் விண்ணப்பம் மட்டும் தாக்கல் செய்தால் போதும்.

இதற்கான அரசு ஆணை உடனடியாக செயலுக்கு வரும்.

குழந்தைகள் இறப்பு விகிதம் குறைந்தது

சென்னை, ஜூலை 25—

சென்னை நகரில் கடந்த 25 ஆண்டுக்காலத்தில் குழந்தைகளின் இறப்பு விகிதம் 50 சதவிகிதமாகக் குறைந்துள்ளது.

1947-ம் ஆண்டு வாக்கில், '1,000க்கு 196' என்ற விகிதத்தில் இருந்த இறப்பு அளவு, 99.8 சதவிகிதமாகக் குறைந்துள்ளது.

'இது இன்னமும் குறையவேண்டும்' என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுரை மாநாடு

வளைவு அமைப்போர் கவனத்துக்கு:

"மதுரை மாவட்ட தி. மு. க. 5-வது மாநாட்டு ஊர்வலம் வரும் வீதிகள் அனைத்திலும் அலங்கார வளைவுகள் அமைக்கும் கழகத் தோழர்கள், அந்தந்த இடங்களை முன்கூட்டியே மாநாட்டு அலுவலகத்திற்குத் தெரிவித்துப் பதிவு செய்து கொள்ளவேண்டும்.

"வளைவுகள் அனைத்தும் ஊர்வலம் வரும் பகுதிகளில் இடைஞ்சலின்றி இருப்பதற்காக 18 அடி உயரத்தில் அமைக்கப்பட வேண்டும்!"

என்று வரவேற்புக் குழுத் தலைவர் திரு. எஸ். முத்து அவர்கள் அறிவிக்கிறார்.

'அண்ணா கொள்கை அடிப்படையில் சிங்கப்பூர் சென்றேன்'

'அறிவும் உடல் நலமும் பேணும் நற்பணிக்கு என் பங்கைச் செலுத்தினேன்'

பாராட்டு விழாவில் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். நன்றியுரை

சென்னை, ஜூலை 26—

கழகப் பொருளாளர் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களைப் பாராட்டி பல்லாவரத்தில் நடந்த மாபெரும் கூட்டத்தில், எம். ஜி. ஆர். அவர்கள் பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், சிங்கப்பூரில் மக்கள் கடைபிடிக்கும் சீரிய பண்புகளை எடுத்துரைத்து 'அவற்றை நாமும் கடைபிடிக்க வேண்டும்' என்றார்.

"தமிழ் மக்களின் உரிமைகள் காக்கப்பட, மாநிலத்துக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்" என்றும் வற்புறுத்தினார்; அவர் பேசியதாவது:—

"சிங்கப்பூர் நகருக்குச் சென்று திரும்பியிருக்கும் என்னால், அங்கே தமிழர்களும் -- சீன மக்களும் -- மலேசிய மக்களும் எங்களை பெருமகிழ்ச்சியோடு வரவேற்று, 'வாழ்க -- வாழ்க' என்று வாழ்த்தியதை மறக்க முடியவில்லை; அவர்களுக்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'அறிவும் வலிவும் உள்ளவன்தான் மனிதன் -- பகுத்தறிவு வாதி' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்வார்கள்.

அந்த வகையில், கல்வி -- உடற்பயிற்சி போன்ற நல்ல காரியங்களுக்கு நிதி திரட்டுவதற்காகவே சிங்கப்பூர் அரசு என்னை அழைத்திருந்தது; ஆக்கப் பணிக்காக நிதி சேர்க்க அந்த அரசு எடுத்துள்ள நல்ல முயற்சிக்கு நான் எனது பங்கைச் செலுத்துவதன் அடையாளமாகவே அந்தச் சிறப்புமிக்க நிகழ்ச்சிக்குச் சென்றிருந்தேன்.

என்னைப் பொறுத்தமட்டில், நான் தி. மு. க. உறுப்பினன்; அரசியலிலும் -- கலையிலும் ஈடுபட்டிருக்கின்ற காரணத்தால் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன அந்த இலட்சியத்தை நிறைவேற்றுவதற்காகவே நான் அங்கே செல்லச் சம்மதித்தேன்.

முன்பொருமுறை, 'நிருத்ய சக்ரவர்த்தி' என்ற பட்டத்தைப் பெறுவதற்காக அங்கே நான் அழைக்கப்பட்டபோது, 'அங்கே போய் என்னவெல்லாம் பேசுவது' என்று அண்ணா அவர்களிடம் கேட்டேன்; பெரிதும் உடல் நலிவுற்றிருந்த நிலையிலும் பேரறிஞர் அண்ணா அவர்கள், 'அங்குள்ள அரசியல் வேறு; அங்கேயும் தமிழர்கள் இருக்கிறார்கள்; அவர்களுக்கு உன் பேச்சால் அந்த அரசுமூலம் துன்பம் உண்டாகாதபடி பார்த்துக் கொள்' என்று ஒரு தாளில் என்னிடம் எழுதிக் காட்டினார்கள்.

அங்கேயும் தமிழர்கள் இருக்கிறார்கள்; என்றாலும், அவர்கள் கடைபிடிக்கும் நல்ல பழக்கங்களை நாம் கவனிக்க வேண்டும்.

அங்கெல்லாம் ஒரு காகிதத்தை மடித்து வீதியில் போட்டுவிட முடியாது; எச்சில் வீதியிலேயே உமிழ்வதும் கிடையாது; வீட்டில் நாம் ஒருவரோடு பேசும்போது அவர்கள் எச்சில் உமிழ்வதென்றால், எழுந்துபோய் ஒதுக்குப்புறக் கழிவறையில் உமிழ்ந்துவிட்டு -- பிறகு வாயைக் கழுவி விட்டு வந்துதான் நம்மோடு பேசுவார்கள்.

அங்கே இருக்கின்ற அந்தத் தமிழர்களைப் போலவா நாம் இங்கே இருக்கின்றோம்?

சீனப் படம் ஒன்றைப் பார்ப்பதற்காக என்னை அழைத்துச் சென்றிருந்தனர்; திறந்த வெளியில் திரையரங்கு -- காரில் இருந்தவாறே படம் பார்க்கலாம்; அப்படிப் படம் பார்த்துக் கொண்டிருந்தபோது ஐஸ் கிரீம் தரப்பட்டது; சாப்பிட்டுவிட்டுத் தாளைக் கீழே போட்டுவிட்டேன்; ஒருவர் வந்தார்; எதுவும் பேசாமல் அந்தத் தாளை எடுத்துப் போய் ஒரு குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டுப் போனார்.

சிங்கப்பூரில் இப்படிச் சட்டத்தின் மூலமும் -- அறிவின் மூலமும் கடைபிடிக்கப்படும் பண்பை நாமும் கடைபிடிக்கப் பழக வேண்டும்.

'ரிக்ஷாக்காரன்' படத்தில் நான் ரிக்ஷாக்காரனாக நடித்தேன்; எப்படியெல்லாம் துன்பப்பட்டு ரிக்ஷாக்காரர்கள் வாழ்க்கை நடத்துகிறார்கள் என்பதைக் காட்டும் படம் அது; அதில் நான் ரிக்ஷாக்காரனாக நடிப்பது மட்டும் போதாது; அதைத் தத்ரூபமாகக் காட்ட ஒளி -- ஒலி அமைப்பெல்லாம் சரியாக இருந்ததால்தான், அந்தப் படம் சிறப்படைந்தது; ஒரு நாடும் அப்படித்தான்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் என்மேல் கொண்டிருந்த அன்பும் -- பாச உணர்வும் உங்களுக்குத் தெரியும்; ஒற்றைவாடைத் தியேட்டரில் நிதிக் கூட்டம் ஒன்றில் பேசும்போது அண்ணா அவர்கள் சொன்னார் -- 'கழகத்திற்கு யார் வந்தாலும் அவர்கள் மூலம் இலாப நட்டத்தைப் பார்க்கின்றவன் நான்; எம். ஜி. ஆர். அவர்களைப் பொறுத்த வரையில் கட்சிக்கு இலாபம் தானே தவிர நட்டமில்லை' என்று!

தி. மு. கழகத்தைச் சேர்ந்த அனைவரும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்போல் -- குடும்பப் பாசத்துடன், பேரறிஞர் அண்ணா அவர்களின் இலட்சியத்தை நிறைவேற்றி வருகிறோம்.

ஏழைகளை வாழ வைக்க டாக்டர் கலைஞர் பல திட்டங்கள், உருவாக்கப்பட்டு, நாவலரால் -- என் போன்றவர்களால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

சிங்கப்பூரிலே ஏறத்தாழ 25 இலட்சம் பேர்கள்தான் இருக்கிறார்கள்; இங்கே -- சென்னையிலே மட்டும் ஏறத்தாழ 35 இலட்சம் பேர் இருக்கிறார்கள்.

அவ்வளவு குறைவான மக்கள் தொகை உள்ள சிங்கப்பூர் தனி நாடாக -- தனிக் கொடியின் கீழ் இருக்கிறது; தனது உரிமைகளைத் தடையின்றி நிறைவேற்றிக் கொள்கிறது.

அப்படித் தனி நாடாக வேண்டும் -- என்று நாம் கேட்கவில்லை; பிரிவினையை எதிர்க்கிறோம் -- கண்டிக்கிறோம்.

அதே நேரத்தில், எங்களுடைய ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள -- எங்கள் உரிமைகள் பாதுகாக்கப்பட -- 'சில அதிகாரங்களை மாநிலத்திற்குக் கொடுங்கள்' என்று கேட்கிறோம்.

தமிழ்நாடு மேம்பட -- தமிழ் மக்கள் நலம் பெற இந்த அரசின் இலட்சியப் பயணம் தொடரும்.

சிலம்புச் செல்வர் அவர்களும் -- திருப்பூர் மொய்தீன் அவர்களும், கழகத்தோடு தாங்கள் பிரிக்க முடியாத அளவில் இணைந்து நிற்பதாகக் குறிப்பிட்டது இந்த நல்ல நோக்கத்தின் அடிப்படையில்தான்!"

இலாபம் தேடக் கட்சியில் சேர்ந்தவர் அல்லர் எம்.ஜி.ஆர்.

கழகத்துக்குக் கேடயமாக அவர் பயன்படுகிறார்

அகில உலகச் சிறப்பு புரட்சி நடிகரைத் தேடி வரத்தான் போகிறது

பாராட்டு விழாவில் சிலம்புச்செல்வர் புகழாரம்

சென்னை, ஜூலை 26—

"இலாபத்திற்காகக் கட்சியை அணுகுவது வேறு -- கொள்கைக்காகக் கட்சியில் சேருவது வேறு!

"இலாபத்திற்காக அணுகுகின்றவன் வியாபாரி -- கொள்கைக்காக அணுகுகின்றவன் அரசியல்வாதி!

"புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்., யோக்கியமான அரசியல்வாதி! தி. மு. கழகத்தை அவர் கேடயமாகப் பயன்படுத்தவில்லை -- தி. மு. கழகத்துக்குத்தான் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். கேடயமாகப் பயன்படுகிறார்"

என்று சிலம்புச்செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள், பல்லாவரத்தில் நடந்த பாராட்டுக் கூட்டத்தில் பேசுகையில் புரட்சி நடிகருக்குப் புகழாரம் சூட்டினார்; அவர் மேலும் பேசியதாவது:—

"இன்று நமது புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களுக்கு, 'பாரத்' விருது வழங்கப்பட்டிருக்கிறது; இந்த நிகழ்ச்சி, நமக்கெல்லாம் பெரு மகிழ்ச்சியைத் தருவதாக இருக்கிறது; இந்த வேளையில் மத்திய பேரரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் பட்டம் இத்தனை நாட்களாக வடக்கே சென்றுகொண்டிருந்தது; அது இப்போதுதான் தென் கோடிக்குத் திரும்பியிருக்கிறது.

தென்னாட்டிற்கு இந்தப் பட்டம் கிடைத்ததற்கு மகிழ்ச்சிதான்; இதே பட்டம் என். டி. இராமாராவ் அவர்களுக்குக் கிடைத்தாலும் மகிழ்ச்சிதான்.

தெற்கே உள்ளவர்களின் குறைபாட்டை, இந்த 'பாரத்' பட்டம் வழங்கியதன்மூலம் மத்திய அரசு நிறைவு செய்துள்ளது.

இதைக்கட இன்று குற்றம் சொல்வதில் தமிழனுக்கு இணை வேறு யாருமில்லை!

கிடைத்ததை இழப்பதைத்தான் தமிழன் விரும்புகிறானே தவிர, கொடுத்ததைப் பாராட்டுவதற்கு மனம் வரவில்லை!

சிறந்த நடிகர் எம். ஜி. ஆர். என்பதற்கான பரிசை முன்பு தமிழக அரசும் -- இப்போது மத்திய அரசும் -- சிங்கப்பூர் அரசும் அளித்துள்ளன.

குடியரசுத் தலைவர் -- தலைமையமைச்சர் போன்றவர்களுக்கு அளிக்கப்பட்ட மரியாதையை, புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களுக்குச் சிங்கப்பூர் அரசு கொடுத்திருப்பதை அறிகிறோம்; அவருக்குக் கிடைத்த பட்டம் அவருக்கு மட்டுமல்ல -- தமிழர்களுக்கும், தமிழநாட்டிற்குமே கிடைத்ததாகக் கருதுகிறேன்.

எம். ஜி. ஆர். அவர்களின் பணி கடந்த தேர்தலில் எப்படி இருந்தது என்பதை நாடு அறியும்.

நடிப்பின் இலக்கணமாக விளங்குகிறார் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர்.; ஆணவமில்லாத -- அடக்கம் மிக்க கலைஞராக இருப்பதால் தான் அவரது காதல் காட்சியை ரசித்தேன்.

தான் ஈட்டுகின்ற பொருளைத் திரும்ப மக்களுக்கே தருவது தான் சிறப்பு; வணிகத்திலும் அப்படித்தான் -- ஈட்டுகின்ற பொருளை மக்களுக்கு வேறு ஒரு விதத்தில் கொடுக்கின்றனர்; அப்படித்தான் அதைக் கலைத்துறையில் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். செய்துவருகிறார்.

தமிழ்நாட்டின் அரசியலில் ஒரே அணியாக -- பிரிக்க முடியாத அணியாகத் தமிழரசுக் கழகமும் -- தி. மு. கழகமும் இருந்துவருகின்றன!

இன்று மத்தியப் பேரரசு புரட்சி நடிகருக்கு 'பாரத்' விருது வழங்கி கௌரவித்தது; புரட்சி நடிகரின் நடிப்பைப் பாராட்டி உலக அரசுகள் அவருக்கு அழைப்பு அனுப்பும்; அவர் உலக நடிகராக ஆகும் காலம் விரைவில் வரும்; அப்படிப்பட்ட நடிகர் பல்லாண்டு வாழ்ந்து பல காரியங்களை நாட்டுக்குச் செய்யட்டும்."

இந்திரா காங்கிரசு ஆட்சியில் துப்பாக்கிச் சூடு

ஆட்சியாளரின் 'அணுகுமுறைக்'கு இருவர் பலி

ஹசாரிபாக், ஜூலை 26—

இந்திரா காங்கிரசு ஆட்சி நடக்கும் பீகார் மாநிலத்தில், தொழிலாளர்கள் மீது போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் இருவர் கொல்லப்பட்டனர்; பலருக்குக் காயம் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

தொழிலாளர்களும் -- கிராமத்தினரும் போலீசார்மீது கற்களாலும் -- ஈட்டிகளாலும் தாக்கிய

(4-ம் பக்கம் பார்க்க)

முதல்வர்கள் மாநாட்டில் கலைஞரின் பங்கு

மற்ற மாநில முதல்வர்களும் பாராட்டும்வகையில் அமைந்தது

வெற்றுக் கிளர்ச்சியாளர்களின் வாயடைக்க வழி வகுத்தார்

'மெயில்' இதழின் பாராட்டு--டில்லிச் செய்தியாளர் தரும் தகவல்

புதுடில்லி, ஜூலை 26—

"முதலமைச்சர்கள் மாநாட்டில் தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் கடைப்பிடித்த அரசியல், மேதைமை மிக்க நிலையின் மூலம் தி. மு. கழகத்துக்கு எதிராகத் திரண்டு வந்த எதிர்ப்புச் சக்திகள் வலிவிழந்து போயின" என்று புதுடில்லியிலுள்ள அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

மாநாட்டின்முன் காங்கிரசுக் குழுவின் அறிக்கைகொண்டு வரம்புவடுவது குறித்து நுணுக்கக் கேள்விகள் எதையும் அவர் எழுப்பி மாநாட்டினைக் குழப்பவில்லை என்பதுடன்; மாநாடு சுட்டிக் காட்டிய வழிகளில் நிலச் சீர்திருத்த நடவடிக்கைகள் விரைந்து செயலாக்கப்படவேண்டுமென்பதில் முதலமைச்சர்களது பொதுவான நிலையோடு அவர் ஒன்றியும் நின்றார்.

'கூறப்பட்டுள்ள வழிகளின்படி தமிழகமும் நிலச் சீர்திருத்த நடவடிக்கைகளை எடுக்கும்' என்று சொன்னதுடன், 'பிற மாநிலங்களோடு ஒப்புநோக்கிப் பார்க்கையில், இந்த நடவடிக்கைகளைச் செயலாக்குவதில் தமிழகம் வெகு தூரம் முன்னேறிச் சென்றுள்ளது' என்பதையும் அவர் தெளிவாக்கினார்; 'நிலச் சீர்திருத்த நடவடிக்கைகளை முழுமையாகச் செயலாக்கிடத் தமிழகத்துக்கு இரண்டு மாதங்களே ஆகும்' என்றும் அவர் தெரிவித்தார்.

"எந்த ஒரு விவரத்திலும் திரு. கருணாநிதி அவர்கள், 'நடைமுறைக்கு மீறிய தீவிர பிடிவாதத்தையோ -- தன்னிச்சை போக்கையோ மேற்கொள்ளவில்லை' என்று இங்கு கூறுகிறார்கள்; ஆனால், 'அவரவர் மாநிலங்களில் ஏற்படக் கூடிய தனிச் சிக்கல்களுக்குத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள அந்தந்த மாநில அரசுகளுக்கு உரிமை வழங்குகின்ற முதலமைச்சர்கள் மாநாட்டின் பரிந்துரைகளைச் செயலாக்கத் தமிழக அரசு கடமைப்பட்டுள்ளது' என்ற நிலையை அவர் மேற்கொண்டார்.

அண்மை வாரங்களில் மத்தியத் தலைவர்கள்மீது தமிழ்நாடு முதலமைச்சர் குறைகூறியதை அடுத்து ஓரளவு பரபரப்பான சூழ்நிலை உருவாயிற்று; முதலமைச்சர்கள் மாநாட்டில் அவர் தமது ஒத்துழைப்பையும் வெளிப்படுத்தினார்.

மத்திய -- மாநிலத் தலைவர்களிடையே பகைமை உணர்ச்சிகள் தோன்றக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டதென்றும், ஆனால் திரு. கருணாநிதி இவ்விரு சாராரிடையேயும் நட்புணர்வை ஊட்டினார் என்றும் கூறுகிறார்கள்.

'இது, தி. மு. கழகத்துக்கு முக்கியமானதொரு அரசியல் இலாபம்' என்று இங்கு கருதப்படுகின்றது.

தமிழக முதலமைச்சர், இந்தச் சிக்கல் மிகுந்த பிரச்னையில் பிற மாநிலங்களோடு ஒன்றி நின்று -- அனைத்திந்திய மாநாட்டின் முடிவுகளைத் தெளிவாக ஏற்றிருப்பது, ஏதாவது ஒன்றுக்காகத் தமிழகத்திலே கிளர்ச்சிகளை வளர்த்து வந்த புதிய -- பழைய காங்கிரசுக் கட்சிகளுக்கும், வலது கம்யூனிஸ்டுகளுக்கும் ஒரு தடும்பாக அமையும்."

[சென்னை 'மெயில்' ஆங்கில நாளிதழில், அதன் புதுடில்லிச் செய்தியாளர் திரு பி. ராமசாமி என்பவர் எழுதியுள்ள செய்தி விமர்சனத்தில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.]

புதுடில்லியில் திருவள்ளுவர் சிலை

இடத்தைப் பார்வையிட்டார் முதலமைச்சர் கலைஞர்

புதுடில்லி, ஜூலை 24—

புதுடில்லியில் இராமகிருஷ்ணபுரத்திலுள்ள தமிழ்ச் சங்கக் கட்டடத்திற்கு எதிரில் 10 அடி உயரமுள்ள திருவள்ளுவர் சிலை அமைக்கப்படுகிறது.

15 அடி உயர பீடத்தில் அமர்ந்து இருப்பது போன்ற தோற்றத்தில் சிலை உருவாக்கப்பட்டிருக்கிறது.

முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள புதுடில்லிக்குச் சென்றிருந்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள் -- நேற்று சென்னைக்குப் புறப்படுவதற்குமுன் -- தமிழ்நாடு வீட்டு வசதித் துறை அமைச்சர் க. இராசாராம், மத்திய அரசின் தகவல் -- ஒலிபரப்புத் துறை அமைச்சர் குஜ்ரால் ஆகியோருடன் திருவள்ளுவர் சிலை அமைக்கும் இடத்தைப் பார்வையிட்டார்.

மதுரையில் கண்ணகி சிலை

கோவலன்திடலில் வைக்க ஏற்பாடு

மதுரை, ஜூலை 25—

"மதுரையில் கண்ணகி சிலை அமைக்கப்படும்" என்று மதுரை மேயர் எஸ். முத்து எம்.எல்.சி. கூறினார்.

தமிழ்நாடு ஊராட்சிகளின் ஒன்றியத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட எஸ் அக்கினிராசு அவர்களுக்குப் பாராட்டுக் கூட்டம் நேற்று முன்தினம் இங்கு நடைபெற்றது; அக்கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் கூறியதாவது:-

"சிலப்பதிகாரக் காவியத் தலைவி கண்ணகிக்கு மதுரையில் சிலை வைக்கப்படும்.

"இந்தச் சிலை, மதுரை பழங்காநத்தம் பகுதியில் உள்ள கோவலன் திடலில் அமைக்கவேண்டும் எனக் கேட்கப்பட்டிருக்கிறது; அதன்படி அங்கு சிலை வைக்க ஏற்பாடு செய்யப்படும்."

குறிப்பு:—கோவலன் கொலைப்பட்ட இடம்தான் 'கோவலன் திடல்' என்று இன்னும் வழங்கப்படுகிறது.

குடிமக்களை அழிக்கும் கொடியசெயல்

அமெரிக்காமீதுசெஞ்சினு குற்றச்சாட்டு

ஹாங்காங், ஜூலை 24—

"வெள்ளம் உண்டாக்கி -- சிவிலியன் ஆட்சேதம் ஏற்படுத்த வட வியட்நாமின் அணைக்கரைகள் மீதும் -- பாசனத் திட்டங்கள் மீதும் அமெரிக்கா குண்டு வீசுகிறது" என்று செஞ்சீனு குற்றஞ்சாட்டியது.

"வட வியட்நாமில் அணைக்கரைகள் -- அணைகள் -- பாசன அமைப்புகள் ஆகியவற்றை அமெரிக்கா அழித்தது."

என்று, நவசீனச் செய்தி நிறுவத்தின் ஹனுய் நிருபர் கூறினார்.

"சேதமடைந்த அணைகளைப் பழுது பார்த்துக்கொண்டிருந்த அப்பாவி மக்கள் மீதும் கொடிய குண்டுகளை ஏராளமாக அமெரிக்க விமானங்கள் போட்டதைக் காண ரத்தம் கொதிக்கிறது" என்று அவர் கூறினார்.

அறிவியக்கப் பேரவை

நிர்வாகிகள் தேர்வு

சென்னை, ஜூலை 22—

அறிவியக்கப் பேரவையின் முதலாவது ஆண்டவைக் கூட்டம் 9—7—72 ல் பேரவை அமைப்பாளர் டாக்டர் சாலை இளந்திரையன் தலைமையில் புதுப்பெருங்களத்தூரில் நடைபெற்றது

திரு. எஸ். இராமநாதன், சலகை ப. கண்ணன், தி.பொ. வேதாசலம், காஞ்சி மணிமொழியார், பாவலர் பாலசுந்தரம் ஆகிய பகுத்தறிவாளர்களின் மறைவுக்கும், தமிழ்நாட்டில் பல போராட்டங்களில் உயிர்நீத்தவர்களுக்கும் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

பேரவையின் ஓராண்டுக் காலம் பகுத்தறிவுப் பணிகளை விளக்கி அமைப்பாளரும் உறுப்பினர்களும் பேசினர்.

பேரவையின் வளர்ச்சிக்கும் தீவிரமான பகுத்தறிவுப் பணிகளுக்கும் புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டன.

கொள்கைப் பிரசாரத்திற்காக 'அறிவுச் செய்தி' என்னும் மாதப் பத்திரிகையை விரைவிலேயே தொடங்குவதென்று முடிவு செய்யப்பட்டது.

மற்றும் சாதி ஒழிப்பு--பொருளாதார ஏற்றத்தாழ்வு நீக்கம்--மத வெறி, மூட நம்பிக்கை ஒழிப்பு--பாடப் புத்தகங்களிலும் பள்ளிகளிலும் மத உணர்ச்சி ஊட்டுவதைத் தடுத்தல் ஆகியவை பற்றிய ஒன்பது தீர்மானங்களையும் ஆண்டவை நிறைவேற்றியது

பின்னர், பேரவையின் 1972—73-ம் ஆண்டுக்குரிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது :- அமைப்பாளர்: டாக்டர் சாலை இளந்திரையன்; பொதுச்செயலாளர்: நாத்திக நந்தன்; பொருளாளர்: மணிமாரன்.

மாவட்டந்தோறும் அறிவியக்கப் பேரவையின் கிளைகளை அமைப்பதற்காக, கிளை அமைப்பும் பொறுப்பாளர்களையும் ஆண்டவை நியமித்தது.

ஏக்கருக்கு 30 மூட்டை விளையும் 'கண்ணகி' நெல் வகை

103 நாட்களில் அறுவடை--- 'ஐ.ஆர். 8'-ஐவிடத் தரம் வாய்ந்தது

சென்னை அருகில் 200 ஏக்கரில் சாகுபடி -- வேளாண்மை இயக்குநர் தகவல்

சென்னை, ஜூலை 26—

அதிக விளைச்சல் தரும் புதிய ரக நெல் வகை 'கண்ணகி', சென்னைக்கு அருகிலுள்ள வேளாண்மைப் பண்ணையில் பயிர் செய்யப்பட்டுள்ளது; இந்த வகை நெல், ஏக்கருக்கு 30 மூட்டை விளைகிறது.

சென்னையிலிருந்து 25 மைல் தூரத்தில் உள்ள புதுப்பாக்கம் என்னும் கிராமத்தில், 200 ஏக்கர் நிலப்பரப்பில் 'ஜே' வேளாண்மைப் பண்ணை அமைக்கப்பட்டிருக்கிறது; இந்தப் பண்ணையில் அதிக விளைச்சல் தரும் நெல் வகைகள், மற்றும் பல்வேறு விதமான பயிர் வகைகள் குறித்து ஆராய்ச்சி செய்யப்படுகின்றன; இங்கு 2 ஏக்கர் நிலத்தில அதிக விளைச்சல் தரும் 'கண்ணகி' என்ற புதிய ரக நெல் பயிர் செய்யப்பட்டுள்ளது.

'ஒட்டுக் கிச்சலி' என்று கூறப்படும் 'டி.கே.எம். 6-' வகை நெல்லின் கருவையும் -- 'ஐ.ஆர். 8-' நெல்லின் கருவையும் இணைத்து டெல்லியில் உள்ள வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் இந்தப் புதிய ரக நெல்லைக் கண்டுபிடித்துள்ளது; இதற்குத் தமிழக அரசு 'கண்ணகி' என்று பெயர் சூட்டியிருக்கிறது.

விதைத்து 103 நாட்களில் அறுவடைக்குத் தயாராகிவிடும் இந்த நெல் வகை அதிக விளைச்சல் தருவதுடன், ஐ ஆர். 8'-ஐ விடத் தரத்தில் சிறந்ததாகவும் இருக்கிறது.

'ஜே' வேளாண்மைப் பண்ணையில் பயிர் செய்யப்பட்டுள்ள இந்தக் 'கண்ணகி' ரக நெல், அறுவடைக்குத் தயாராக இருக்கிறது.

இதை, வேளாண்மைத் துறை இயக்குநர் அந்தோணி -- இணை இயக்குநர் அனுமந்தராவ் -- மற்றும் பத்திரிகை நிருபர்கள் சுற்றிப் பார்த்தார்கள்.

பண்ணையைச் சுற்றிப் பார்த்த இயக்குநர் அந்தோணி -- நெற்கதிர்களைப் பரிசீலித்துவிட்டு, 'ஏக்கருக்கு 30 மூட்டை நெல் (2½ டன் நெல்) கிடைக்கும்' என்று மதிப்பிட்டார்.

தஞ்சையில் 500 ஏக்கர் நிலப்பரப்பில் 'கண்ணகி' வகை நெல் பயிரிட்டிருப்பதாகவும், இதிலிருந்து கிடைக்கும் நெல் விதையைக் கொண்டு மேலும் பல ஆயிரக் கணக்கான ஏக்கரில் இது பயிரிடப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

இந்தப் பண்ணையைச் சேர்ந்த வேளாண்மை நிபுணர் நாகராசன் பேசும்போது, 'கண்ணகி' வகை நெல்லைத் தமிழ்நாட்டில் எந்தப் பகுதியிலும் பயிர் செய்யலாம் என்றும், கார்—நவரை—சொர்ணவாரி ஆகிய எந்தப் பட்டங்களிலும் அதை விதைத்தாலும் நல்ல பலன் கிடைக்கும் என்றும் கூறினார்.

"ஏக்கருக்கு ரூ. 500 முதலீடு செய்து இந்த வகை நெற்பயிரைப் பயிர் செய்தால் -- செலவு போக ரூ. 600 இலாபம் கிடைக்கும்" என்றும் அவர் தெரிவித்தார்.

மைசூர் 'கருநாடகம்' ஆகிறது

சட்டமன்றத்தில் தீர்மானம்-ஆதரித்து கழக உறுப்பினர் கன்னடப் பேச்சு

பெங்களூர், ஜூலை 26—

மைசூர் மாநிலத்தை 'கர்நாடகம்' என்று பெயர் மாற்றம் செய்யக் கோரும் தீர்மானத்தை, மைசூர் சட்ட மன்றத்தில் முதலமைச்சர் தேவராஜ் அர்ஸ் நேற்று முன் மொழிந்தார்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்ததும அவையே மகிழ்ச்சியில் திளைத்தது; எல்லாத் தரப்பு உறுப்பினர்களும் ஆரவாரம் செய்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக கொண்டனர்.

தீவிர கன்னடவாதியான வட்டல் நாகராஜ் எனும் உறுப்பினர், அவைத் தலைவர் திருமதி நாக ரத்தினம்மாவுக்கு சந்தன மாலை ஒன்றை வழங்கினர்; முதலமைச்சருக்கும் சந்தன மாலை அணிவிக்கப்பட்டது; 'கருநாடகம்' எனும் பெயர் மாற்றத்துக்காகப் போராடிய அனைவருக்காகவும் அவைத் தலைவரின் முன்பு இருந்த ஒலி பெருக்கிக்கும் வட்டல் நாகராஜ மாலை ஒன்று அணிவித்தார்.

குடியரசுக் கட்சியைச் சேர்ந்த சி. எம். ஆறுமுகம், முதலமைச்சருக்கும் — அவைத் தலைவருக்கும் இனிப்புப் பொட்டலங்களை வழங்கினர்; மற்ற உறுப்பினர்களுக்கும் இனிப்பு வழங்கினர்.

இந்நிகழ்ச்சியைக் கொண்டாடும் பொருட்டு அரைமணி நேரம் அவை ஒத்திவைக்கப்பட்டது.

இராகுகாலம் துவங்குவதற்கு முன்னமேயே தீர்மானத்தை முன் மொழிய வேண்டும் என்பதற்காக அவையின் நிகழ்ச்சி நிரல்கள் மாற்றியமைக்கப்பட்டன.

அளவற்ற மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்த உறுப்பினர்களின் செயல்களை, அமைச்சர் புட்டாசாமி என்பவர் விரும்பவில்லை; மாலையுடன் வட்டல் நாகராஜ் அவைத் தலைவரிடம் நெருங்கியபோது—அமைச்சர் புட்டாசாமி, 'இப்படிச் செய்வது அவையின் மரபுக்கு உகந்ததல்ல' என்ற தமது கண்டனத்தைத் தெரியப்படுத்தினர்.

மற்றொரு காங்கிரசு உறுப்பினரான சந்திரசேகர் என்பவர், முக்கியமான ஒரு பிரச்சினையை அவையில் எழுப்பத் தாம் முயன்றதாகவும், ஆனால் அனுமதி மறுக்கப்பட்டதாகவும் கூறி, இப்படிப்பட்ட 'நாடக'ங்களை அனுமதிப்பதாகக் குறிப்பிட்டார்.

வட்டல் நாகராசும் — மற்றொரு உறுப்பினரும் இதை ஆட்சேபித்தனர்; உறுப்பினர் தமது பேச்சைத் திரும்பப் பெறவேண்டுமென்று வற்புறுத்தினர்.

அவைத் தலைவரும், 'மாலை அணிவிப்பது போன்ற செயல்கள் அவையின் மரபுக்கு உகந்ததல்ல' என்று சுட்டிக்காட்டினர்.

அமைச்சர் புட்டாசாமி, 'இப்படிப்பட்ட நடவடிக்கைகளை அனுமதித்தால், இதற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களுக்கும் இவை வழிவகுக்கும்' என்றார்.

இதற்கிடையில் சுயேச்சை உறுப்பினர் பைரா கௌடா என்பவர் ஒரு பொட்டலத்தைக் காட்டி, இதில் ஒரு வகையான வேர் இருப்பதாகக் குறிப்பிட்டார்.

கோலார் பகுதியில் கடும் பஞ்ச நிலை நிலவுவதாகவும், அப்பகுதி மக்கள் இவ்வகை வேரைத் தின்று உயிர் வாழ்ந்துவருவதாகவும் விளக்கினர்.

பைரா கௌடாவின் இச்செயலை அவைத் தலைவர் கடுமையாகக் கண்டித்தார்; 'உறுப்பினர்கள் இதே போக்கில் செயல்பட்டால் புத்தகமும் — காகிதமும் தவிர வேறு எதையும் சட்டமன்றத்தினுள் கொண்டுவர அனுமதிக்க முடியாத நிலை உருவாகும்' என்றார்.

தீர்மானத்தை ஆதரித்துப் பல கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினர்கள் பேசினர்.

கழக உறுப்பினர் ஆதரவு

கழக உறுப்பினர் திராவிடமணி, கன்னட மொழியிலேயே பேசி தமது ஆதரவைத் தெரிவித்தார்.

இந்திரா காங்கிரசு ஆட்சியில்..

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும், அதன்மீது துப்பாக்கிப் பிரயோகம் நடந்ததாகவும் கூறப்படுகிறது.

தொழிச்சங்கப் போட்டி காரணமாக ஏற்பட்ட பதட்ட நிலையே இதற்கு அடிப்படைக் காரணம் என்று தெரியவருகிறது.

அகில இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரசுக்கும — இந்திய தேசியத் தொழிற்சங்கக் காங்கிரசுக்கும் இடையே கடும் போட்டி காரணமாக பதட்ட நிலை தோன்றியதாகவும், அதற்குப் பின் மேற்கூறிய சம்பவம் நடந்ததாகவும் தெரிய வருகிறது.

புதிய கருவி கண்டுபிடிப்பு

புதுவைமாணவர்சாதனை— பாராட்டி பரிசளிப்பு

பாண்டிச்சேரி, ஜூலை 26—

பாண்டிச்சேரி தாகூர் கலைக் கல்லூரியில் பி. எஸ்சி. இரண்டாவது ஆண்டு படித்துவரும் என். சங்கரன் என்றவர், புதிய ரக 'பெரிஸ்கோப் எனும் கருவியைக் கண்டுபிடித்திருக்கிறார்.

'பெரிஸ்கோப்' என்பது — நீர் மூழ்கிக் கப்பலில் இருந்து கொண்டே நீர்மட்டத்துக்கு மேலேயுள்ள காட்சிகளைக் காண்பதற்குப் பயன்படும் கருவியாகும்.

தற்போதுள்ள சாதாரண 'பெரிஸ்கோப்' மூலம் ஒரு குறிப்பிட்ட திசையில் உள்ள காட்சிகளைத் தான் காண இயலும்; ஆனால், புதுவைக் கல்லூரி மாணவர் கண்டுபிடித்துள்ள கருவியின் மூலம் ஒரே சமயத்தில் எல்லாத் திசைகளிலும் உள்ள காட்சிகளைக் காணலாம்.

புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதற்காக அமெரிக்காவிலுள்ள குழு — ஆண்டுதோறும் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்குபவர்களுக்குப் பரிசு வழங்குகிறது; இந்த ஆண்டில் இந்தப் பரிசு, புதுவை மாணவர் சங்கரனுக்குக் கிடைத்திருக்கிறது; அவருக்கு ரூ. 200 ரொக்கமும — சான்று இதழ்களும் வழங்கப்படுகிறது.

அதுமட்டுமன்றி, குடியரசுத் தலைவரின் விருதும் அம்மாணவருக்குக் கிடைத்திருக்கிறது; விருது வழங்கும் விழா, ஜூலை 31-ஆம நாள் நடைபெறும்; பரிசைப் பெறுவதற்கு அவர் புதுவைக்குச் செல்கிறார்.

வெளி வர்த்தகத் துறையில் சாதக நிலை

ரூ. 38 கோடி அந்நியச் செலாவணி மிச்சம்

புதுடில்லி, ஜூலை 26—

இந்தியாவின வெளிநாட்டு வர்த்தகத்தைப் பொறுத்த வரையில, 1972—73 ம ஆண்டுத் துவக்கம சாதகமாகவே இருப்பதாகத் தெரிய வருகிறது.

ஆண்டுத் துவக்கத்தின் முதல் இரண்டு மாதங்களான ஏப்ரல்— மே மாதத்தில் ரூ. 310 கோடிக்கு ஏற்றுமதியும— ரூ 272 கோடிக்கு இறக்குமதியும் செய்யப்பட்டிருப்பதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த வகையில, இந்த இரண்டு மாதத்தில மட்டும ரூ. 38 கோடி அந்நியச் செலாவணி இந்தியாவுக்கு அதிகமாகக் கிடைத்திருக்கிறது.

கேரள நிலப்போராட்டம் வலுக்கிறது

அச்சுத மேனனின் 'அணுகு முறை'யால் 80,967 பேர் இதுவரை கைது

திருவனந்தபுரம், ஜூலை 26—

கேரளத்தில் நடைபெற்றுவரும் தரிசு நிலப் போராட்டம் நேற்று மேலும் விரிவடைந்தது.

600 வெவ்வேறு பகுதிகளில் தொண்டர்கள், தரிசாகக் கிடந்த நிலங்களில் இறங்கினர்; போலீசார் அவர்களைக் கைது செய்தனர்.

300 பகுதிகளிலிருந்து கிடைத்த தகவல்களின்படி, நேற்று ஒரு நாள் மட்டும் 15,581 தொண்டர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்; அல்லது அந்தந்த நிலங்களிலிருந்து அகற்றப்பட்டிருக்கின்றனர்.

நேற்று முன்னுள் வரையில், இந்தப் போராட்டம் நடைபெற்ற 60 நாட்களிலும 65,386 பேர் கைதாகியிருக்கின்றனர்; ஆகவே, நேற்று வரையில் 80,967 பேர் கைது செய்யப்பட்டோ அல்லது நிலங்களிலிருந்து அகற்றப்பட்டோ பின்னர் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர்.

காஷ்மீர்பற்றி பூட்டோவின் கூற்று

எதிர்ப்பாளரை திருப்திபடுத்தும் தந்திரம்

புதுடில்லி, ஜூலை 26—

"காஷ்மீர் — சர்வதேசப் பிரச்சினை; இந்தப் பிரச்சினையில் தீர்வு காணப்பட வேண்டும் — என்று இந்தியத் தலைமையமைச்சருடன் அண்மையில் நடத்திய பேச்சுவார்த்தையின் போது தெளிவுபடுத்தியிருக்கிறேன்"

என்று பாகிஸ்தான் அதிபர் பூட்டோ, சிந்து மாநிலம் சுக்கூரில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறியிருக்கிறார்.

"காஷ்மீர் பிரச்சினை சம்பந்தமான எங்கள் கொள்கைகளில் நாங்கள் உறுதியுடன் இருக்கிறோம"

என்றும் அவர் கூறியதாகப் பாகிஸ்தான வானொலி தெரிவித்திருக்கிறது.

"சிம்லா உடன்பாட்டின்கீழ் 5,000 சதுர மைல் பகுதியிலிருந்து இந்தியா வெளியேற வேண்டும; ஆகவே, சிம்லா உடன்பாட்டை எதிர்ப்பவர்கள், 'இப்பகுதி, இந்தியாவிடமே இருக்கவேண்டும் என விரும்புகின்றனர்' எனப் பொருள்படும்"

எனப் பூட்டோ கூறியதாகவும் அவ்வானொலி தெரிவித்திருக்கிறது.

இந்திய அமைச்சரவைக் கூட்டத்தில் எதிரொலி

நேற்று நடைபெற்ற இந்திய அமைச்சரவையின் கூட்டத்தில — தலைமையமைச்சர் இந்திரா காந்தி — சிம்லா ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை விளக்கிக்கொண்டிருக்கையில, சில இளம் அமைச்சர்கள், காஷ்மீர் உள்ளிட்ட ஒப்பந்தத்தின் சில விதிகளைப்பற்றி விளக்கம் கேட்டிருக்கின்றனர்; காஷ்மீர் பிரச்சனைக்கு இன்னமும் உயிர் இருப்பதாகப் பாகிஸ்தான் அதிபர் பூட்டோ பேசிவருவதைக் குறிப்பிட்டே அவர்கள் அவ்வாறு விளக்கம் கோரினர்.

"பாகிஸ்தானிலுள்ள அதிருப்தியாளரைச சமாதானப் படுத்தவே அதிபர் பூட்டோ அவ்வாறு பேசிவருகிறார் என நாம் கருதுகிறோம்" என்று விளக்கம் தரப்பட்டது.

'மூன்றாவது தரப்பின் உதவியின்றியே எல்லாத் தகராறுகளுக்கும் நமக்கு நாமே பேச்சுவார்த்தைமூலம் தீர்வு காணலாம் என்பதற்குப் பாகிஸ்தான இணங்கியிருக்கிறது" என்றும் இளம அமைச்சர்களுக்குச் சுட்டிக் காட்டப்பட்டது.

உணவு — வருவாய்த் துறை அமைச்சர் ப. உ. சண்முகம் நிகழ்ச்சிகள்

ஜூலை 27: செஞ்சித் தொகுதியில சட்டப்பேரவை உறுப்பினர் திரு எஸ். சகாதேவன் ஏற்பாடு செய்திருக்கின்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளல்.

கல்வித் திட்டத்திலும் மத்திய அரசு தலையீடு

நாடு முழுவதும் ஒரே சீரானமுறை ஏற்படுத்தும் முயற்சியாம்

புதிய திட்டம் வகுத்து மாநிலங்கட்கு அனுப்பியுள்ளதாம்

பூனா, ஜூலை 25—

துவக்கக் கல்வி — செகண்டரி கல்வி — மற்றும் பல்கலைக் கழகப் பயிற்சிகளை நாடு முழுவதும் ஒரே சீராக்கும் திட்டம் ஒன்றைத் தயாரித்து மத்திய அரசு மாநிலங்களின் கருத்தறிய அனுப்பிவைத்துள்ளது.

இங்கு நடைபெறும் கல்வி அமைச்சகத்துக்கான நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில், மத்தியக் கல்வித் துறைத் துணையமைச்சர் டி.பி. யாதவ் தெரிவித்தார்; இத்தொடர்பில் அவர் குறிப்பிட்டதாவது:—

"மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கும் நகல் திட்டத்தில், துவக்க – செகண்டரி கல்விக் காலத்தைப் பத்து ஆண்டுகளாகவும், பல்கலைக் கழகக் கல்வியை 5 ஆண்டுகளாகவும் நிர்ணயிக்க யோசனை கூறப்பட்டுள்ளது.

இப்போது பலதரப்பட்ட முறைகளில் இருந்துவரும் கல்வி முறையை மாற்றி, உறுதியான ஒரு கல்வி முறையை உருவாக்குவதே அரசின் நோக்கமாகும்."

தூக்குத் தண்டனையை ஒழிக்க முதற்படி

ஆயுள் தண்டனையே கொலைக் குற்றங்களுக்கு விதிக்கப்படும்

புதுடில்லி, ஜூலை 26—

'எல்லாக் கொலைக் குற்றங்களுக்கும் தூக்குத் தண்டனை' என்ற விதியைத் தளர்த்த மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது.

கொலைக் குற்றம் மெய்ப்பிக்கப்பட்டால் மரண தண்டனை விதிக்கப்பட வேண்டுமென்பது அவசியமல்லவென்றும், தனிக் காரணங்களை யொட்டியே மரண தண்டனை விதிக்கப்படவேண்டுமென்றும் வகைசெய்ய — இந்தியக் குற்ற இயல் சட்டத் தொகுப்பை (ஐ.பி.சி) மத்திய அரசு திருத்தக்கூடும்.

தற்போதைய சட்டத்தின்படி — கொலைக் குற்றம் மெய்ப்பிக்கப்பட்டால் — மரண தண்டனை விதிக்கப்படவேண்டும; குற்றத்தைத் தணித்துக் காட்டும் சூழ்நிலைகள் இருந்தால் ஆயுள் தண்டனை அளிக்கப்படும்; அவ்வாறு அளிப்பதற்கான காரணங்கள் எழுத்து மூலம் தரப்படவேண்டும்.

மத்திய அரசின் இப்போதைய திருத்தம், இந்த நிலையை மாற்றியமைக்கும; ஆயுள் தண்டனையை வழக்கமாக அளிக்கவேண்டுமென்றும, தனிக் காரணங்களுக்காக மட்டுமே மரண தண்டனை அளிக்க வேண்டுமெனறும் அது வகை செய்யும.

சட்டத் துறையின் இந்த யோசனைக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துவிட்டது; எனவே, இதற்கு வகை செய்யும் சட்டத் திருத்தம், நாடாளுமன்றம் கொண்டுவந்து நிறைவேற்றப்படும்.

தூக்கிலிடப்படுவது ஒழிக்கப்படவேண்டும என்ற கோரிக்கை, நெடுங் காலமாகவே இருந்துவருகிறது; இந்தக் கோரிக்கையைப் படிப்படியாக நிறைவேற்றுவதே இப்போதைய திருத்தத்தின் நோக்கமாகும்.

விவசாயிகட்குப் பாஸ் புத்தகங்...

(1-ம பக்கத் தொடர்ச்சி)

காட்டுவதற்கான ஆதாரம் எதுவும அவர்களிடம இல்லை; வட்டி விகிதம — எப்படி — எப்போது — யாரிடம கடனைத் திருப்பிக் கொடுக்கவேண்டும — என்ற விவரங்கள் தெரியாததால் சில நேரங்களில அவர்கள் சிரமப்படுகிறார்கள்; இதற்காகவே அவர்களுக்குப் 'பாஸ்' புத்தகங்கள் வழங்க அரசு முடிவு செய்திருக்கிறது.

இளமுருகு — பொற்செல்விக்கு அறுவைச் சிகிச்சை

சென்னை, ஜூலை 25—

சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில சிகிச்சை பெற்றுவரும் 'அஞ்சுகம்' ஏட்டின் ஆசிரியரும், தி. மு. கழக முன்னணித் தோழருமான திரு. இளமுருகு பொற்செல்விக்கு 14—7—72 அன்று சிகிச்சை முறையில முதல் அறுவைச் சிகிச்சை நடைபெற்றது; 25—7—72 அன்று இரண்டாவது அறுவைச சிகிச்சை மருத்துவர் இரங்கபாஷ்யம் அவர்களால செய்யப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible] அச்சகத்தில் (24, [illegible] செட்டித் தெரு, சென்னை-[illegible]) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.